Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 12-12-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

## Nendran Banana Prices to be stable in the Next Two months

India, with its rich biodiversity of banana, stood first with a contribution of 27.8% to world banana production during 2011. A vast majority of producers are small farmers. The major banana growing countries are India, China, Philippines, Ecuador and Brazil in order. At the world level 106.54 million tonnes of banana is produced from an area of 5.15 million ha with the average productivity of 20.7 tonnes/ha during 2011.

There is a considerable increase in acreage and production of banana in India during the past five years. It increased from 5.69 lakh ha in 2005-06 to 8.16 lakh ha in 2011-12, while in terms of production it increased from 188.87 to 296.67 lakh tonnes with the productivity increase from 33.1 to 36.3 tonnes/ha. India exports 0.17 % of its production to countries viz. U.A.E., Saudi Arabia, Oman, Pakistan and Nepal. The varieties which are in demand internationally include Grand Naine and Robusta.

In India, Tamil Nadu produces about 82.53 lakh tonnes from an area of 1.25 lakh ha, and has the highest production share with 26.47 per cent (2011). Maharashtra ranks second with 13.5 per cent followed by Gujarat 13.3 per cent. In terms of productivity, Tamil Nadu ranked first with 65.8 tonnes/ha followed by Gujarat 61.5 tonnes/ha and Maharashtra 52.5 tonnes/ha.

Nendran is one of the important banana varieties cultivated in Tamil Nadu. It is mainly grown in Coimbatore, Erode, Trichy and Kanyakumari districts. Nendran fruits are big sized, mainly used for the preparation of chips. Each bunch of fruit has minimum of 5 hands weighing about 8 - 12 kg. Nendran is planted during April – May besides Oct – Nov to coincide with Onam festival. Nendran withstands wind damage and high-density planting is followed.

Among several varieties, the Nendran variety grown in Tamil Nadu occupies the first choice among consumers of Kerala. Jan – Feb is the peak arrival period and July, August faces lean arrivals. Present market price for Nendran is around Rs 38/kg. It varies depending on the quality parameters. To make the farmers aware of the future trend in farm harvest prices, Back Office of Agro Marketing Intelligence and Business Promotion Centre (AMI & BPC) functioning in Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the prices of Nendran that prevailed in Coimbatore Farmers shandy for the past 10 years.

As a result, it is forecasted that price of Nendran banana in Coimbatore market during December 2013 will be around Rs 36 - 38/ kg. Festival season in January, 2014 may fetch Rs 1 - 2/kg higher ie. Between Rs 38 – 40/kg. The prices are expected to be stable between Rs 37 – 38/kg in February, 2014.

**For further details contact**

Domestic and Export Market Intelligence Cell (DEMIC),
Centre for Agricultural and Rural Development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore – 641 003.
Phone: 0422-2431405

**For Technical Details please contact**

The Professor and Head,
Department of Fruit crops,
Horticultural College and Research Institute,
Tamil Nadu Agricultural University,
Coimbatore – 641 003.
Phone: 0422-6611269

Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-12-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நேந்திரன் விலை நிலையாக இருக்கும்

பழவகைகளில் எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் பழங்களில் வாழைப் பழம் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. உலகளவில் இந்தியா 2011ம் ஆண்டில் 27.8 சதவீதம் உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது. உலகளவில் வாழை உற்பத்தி செய்யும் நாடுகளின் வரிசையில் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ், ஈக்குவேடார் மற்றும் பிரேசில் உள்ளன. 2011ல் உலகளவில் 5.15 மில்லியன் எக்டர் பரப்பிலிருந்து 106.54 மில்லியன் டன் வாழை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சராசரி உற்பத்தித் திறன் ஒரு எக்டருக்கு 20.7 டன்களாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவில் வாழையின் பரப்பு மற்றும் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பரப்பு, 2005-06ல் 5.69 இலட்சம் எக்டரிலிருந்து, 2011-12ல் 8.16 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி 188.87 இலட்சம் டன்னிலிருந்து 296.67 இலட்சம் டன்களாகவும் மற்றும் உற்பத்தித் திறன் ஒரு எக்டருக்கு 33.1 டன்னிலிருந்து 36.3 டன்னாகவும் அதிகரித்துள்ளது. உலக ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 0.17 சதவீதம் ஆகும். ஐக்கிய அரபுக் குடியரசு, சவுதி அரேபியா, ஓமன், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கிரான்ட் நையன், மற்றும் ரோபஸ்டா வாழை இரகங்களுக்கு சர்வதேச அளவில் அதிகத் தேவை உள்ளது.

இந்தியாவில், வாழை உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி வகிக்கிறது (26.74 சதவீதம்). அதாவது 82.53 இலட்சம் டன் வாழை 1.25 இலட்சம் எக்டர் பரப்பளவில் இருந்து 2011-12ல் உற்பத்தி செய்யப்பட்டது. இரண்டாம் இடத்தில் மகாராஷ்டிராவும் (13.5 சதவீமும்) இதனைத் தொடர்ந்து குஜராத் (13.3 சதவீதம்) மாநிலமும் உள்ளன. உற்பத்தித்திறனிலும் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது (65.8 டன் / எக்டர்). இதைத் தொடர்ந்து குஜராத் 61.5 டன் / எக்டர் மற்றும் மகாராஷ்டிரா 52.5 டன் / எக்டர் என்ற அளவில் உள்ளன.

தமிழ்நாட்டில் நேந்திரன் வாழை முக்கிய இரகங்களில் ஒன்றாகும். கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி மற்றும் கன்னியாகுமாரி மாவட்டங்களில் நேந்திரன் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. வாழை சிப்ஸ் தயாரிப்பதற்கு நேந்திரன் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. முக்கியமாக தமிழ்நாட்டில் விளையும் நேந்திரன் பழங்கள் கேரள மாநிலத்தில் அதிகமாக விரும்ப்படுகிறது. நேந்திரன் ஒரு தார்க்கு சராசரி 8 முதல் 12 கிலோ வரை எடையுள்ளது. ஏப்ரல்-மே மற்றும் அக்டோபர்- நவம்பர் ஆகிய மாதங்களில் நேந்திரன் நடவு செய்யப் படுகிறது. இந்த இரகம் காற்று சேதத்தை தாங்கி வளர்வதால் உயர் அடர்த்தி நடவுமுறை பின்பற்றப்படுகிறது.

அதிகமான வரத்துக்கள் ஜனவரி- பிப்ரவரியிலும் மற்றும் குறைந்த வரத்துக்கள் ஜூலை- ஆகஸ்டிலும் உள்ளன. தற்போது சந்தை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.38 ஆகும். இவ்விலை தரம் மற்றும் இதர பண்புகளைப் பொறுத்து மாறுபடும். வரும் மாதங்களில் அறுவடை விலைகளைப் பற்றி விவசாயிகள் விழிப்புடன் செயல்பட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கோவையில் இயங்கி வரும் உழவர் சந்தையில் கடந்த 10 வருடங்களாக நிலவிய நேந்திரன் விலைகளை ஆராய்ந்தது. இதன்படி கோயம்புத்தூர் உழவர் சந்தைகளில் 2013 டிசம்பர் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.36 முதல் 38 வரை கிடைக்கும். மேலும் 2014 ஜனவரியில் பண்டிகைகள் இருப்பதால் நேந்திரன் வாழையின் விலை ரூ.1 முதல் 2 வரை அதிகரிக்கும். அதாவது ஒரு கிலோவிற்கு ரூ.38-40 வரை இருக்கும் என ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. பிப்ரவரி மாதத்தில் நேந்திரன் வாழையின் விலை கிலோ ஒன்றிற்கு ரூ.37 முதல் 38 வரை இருக்கும். இந்த விலைகளைக் கவனத்தில் கொண்டு நேந்திரன் விற்பனையைச் செய்யுமாறு விவசாயிகள் தெரிவிக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u> :-**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பழ பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611269

மக்கள் தொடர்பு அலுவலர்